*Kalanjiyam International Journal of Tamil Studies* **ISSN : 2456-5148** (Online)
Volume 4 | Issue 05, February 2026,

**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/

*Article Type: Original Research Article*

# Administration in Thirukkural

**Dr. R. Vishnupriya***
Assistant Professor in.Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi,Coimbatore District.
ORCID : https://orcid.org/0000-0002-6929-8162

* Correspondence: rvishnupriya2012@gmail.com , Tel: +919524776759

**Received**: 22-12-2025; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Sangam literary texts are understood as literature that appeared two thousand years ago. After that, there are eighteen books of legal literature. Thirukkural is one of these antiquarian texts. This book is composed by Thiruvalluvar. Tirukkural is a book that has seen a boom not only in a country but also in the world. It is considered to be a land that produces the fountain of knowledge that transcends caste, religion, race and language in the minds of people. There is no substance that is not in it, even if it is divided into three parts: virtue, materiality and pleasure. All the elements required for human life are included in it. There are hardly any people in Tamil Nadu who do not know about this book. In such a special Thirukkural, there are many messages about the administrative methods that are needed and used in today's society. Management is multi-dimensional and evolving. Management related courses and management related competitive exams are developing day by day. People who study management get higher positions in work and live. When management is established in the family, the income and expenses are evaluated and the way is made for the progress of life. This article suggests that various methods such as planning, building policies, setting goals, evaluating, making decisions, being punctual, perseverance, moderation, speaking sweetly, and noting are included in Thirukkural as a basis for such management.

**Keywords:** Planning, Estimating, Time Management, Knowledge,

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# திருக்குறளில் நிர்வாகவியல்

***முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.

**ஆய்வுச்சுருக்கம்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இலக்கியங்களாக சங்க இலக்கிய நூல்கள் விளங்குகின்றன. அதற்குப் பின் தோன்றிய நீதி இலக்கியங்களாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அமைகின்றன. இப்பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக திருக்குறள் இடம்பெறுகின்றது. இந்நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டுள்ளது. ஒரு நாட்டுக்கு மட்டுமின்றி உலக அளவில் இன்றளவும் ஏற்றம் கண்டுள்ள நூல் திருக்குறள் ஆகும் . சாதி, மதம், இனம், மொழி கடந்து மக்களின் மனதில் சிந்தனை என்னும் அறிவின் ஊற்றை விளைவிக்கின்ற நிலமாக விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலாக வகுத்துக் கூறப்படினும் அதனுள் இல்லாத பொருளே இல்லை. மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக்கூறுகளும் இதனுள் இடம் பெற்றுள்ளன. உலக அளவில் இந்நூலைப் பற்றி அறியாதவர்களே இல்லை எனலாம். இத்தகைய சிறப்பு மிக்க திருக்குறளில் இன்றைய சமுதாயத்திற்குத் தேவையாக உள்ளதும், பயன்படுகின்றதுமான நிர்வாக வழிமுறைகள் குறித்த செய்திகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அறிவியல் வளர்ச்சியால் உலகம் இன்று வேகமாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிக்கிணங்க இன்று இளைஞர்கள் பலரும் கடல் கடந்து பொருள் ஈட்டச் செல்கின்றனர். தனது குடும்பத்தையும், நாட்டையும் முன்னேற்றப் பலரும் முனைகின்றனர். அதில் சிலர் தான் வெற்றி பெறுகின்றனர். இவ்வெற்றிக்கு அடிப்படை ஒன்று. அஃது திட்டமிட்டு நிர்வகிப்பதே ஆகும். நிர்வாகம் என்பது பல பரிமாணங்களைப் பெற்று வளர்ந்து வருகின்றது. நிர்வாகம் சார்ந்த படிப்புகள், நிர்வாகம் சார்ந்த போட்டித்தேர்வுகள் என்று தினந்தோறும் வளர்ச்சி பெற்று வருகின்றது. நிர்வாகம் பயின்றவர்கள் வேலையில் உயர்ந்த பதவிகளைப் பெற்று வாழ்கின்றனர். உலக நாடுகளில் பல்வேறு நாடுகள் சிறந்த நாடாக முன்னேறுவதற்கு அடிப்படை அந்நாட்டை நிர்வகிக்கும் முறையே ஆகும்.நிர்வாகம் குடும்பத்தில் அமையும் பொழுது வரவு, செலவு மதிப்பிடப்பட்டு வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழி வகை செய்கின்றது. ஒரு நாட்டின் கல்வி, அரசியல், அறிவியல், சுகாதாரம், நீதித்துறை, வருவாய்த்துறை என எல்லாத் துறைகளிலும் வெற்றிபெறுவதற்கு இந்நிர்வாகத் திறனே அடிப்படை ஆகும். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ள, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பொறுமை, ஈடுபாடு, கம்பீரம், தோற்றம், புகழ் போன்றவை அவசியம் எனலாம். இவற்றை ஒரு நிர்வாகம் கற்றுக்கொடுக்கின்றது இத்தகைய நிர்வாகத்திற்கு அடிப்படையாக ஒன்றைத் திட்டமிடுதல், கொள்கைகளைக் கட்டமைத்தல், இலக்குகளை நிர்ணயித்தல் மதிப்பிடல், **முடிவெடுத்தல்,** காலம் தாழ்த்தாது இருத்தல், விடாமுயற்சி**,** நடுவுநிலைமை, இனிமையாகப்பேசுதல்,

குறிப்பறிதல் எனப் பல்வேறு வழிமுறைகள் இருப்பதை திருக்குறளின் வழி ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறிப்புச்சொற்கள்:** திட்டமிடல், மதிப்பிடல், கால மேலாண்மை, அறிவுடைமை

**முன்னுரை**

திருக்குறள் தமிழில் தோன்றிய ஒரு பொதுமறை நூலாகும். காலங்கடந்தும், எல்லை கடந்தும் மக்களால் படிக்கப்பெறும் சிறப்பினை உடையது. நம் முன்னோர்கள் காதலையும், வீரத்தையும் இரண்டு கண்களாகக் போற்றியதோடு, குடும்பத்தை நிர்வகிப்பது, அரசாங்கத்தை நிர்வகிப்பது எனப் பல வகைகளில் பொறுப்புடன் செயல்பட்டு, அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டியாய் நின்று வாழ்ந்தனர். ஒரு காரியத்தை எப்படி நிறைவேற்ற வேண்டும். அதற்கான செயல் திறமை யாருக்கு இருக்கின்றது என்று சரிபார்த்து, அந்தக் காரியத்தை நிறைவேற்றும் படி அவரிடம் கொடுப்பதுதான் நிர்வாகத்திற்கான தனிச்சிறப்பு ஆகும். ஒவ்வொரு மனிதனும் திறமைசாலியே. இருப்பினும் அவனுள்ளே அளப்பரிய ஆற்றல் இருப்பதை வெளிக்கொணரும் களமாக நிர்வாகம் உள்ளது என்பதை திருக்குறளின் வழி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நிர்வாகம் சொல் -விளக்கம்**

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ‘நிர்வாகம்’ என்ற சொல்லிற்குக் ***கட்டுப்படுத்தியும், முறைப்படுத்தியும் கவனிக்கும் செயல்பாடு*** (ப.624) என்றும் மெய்யப்பன் தமிழ் அகராதி ‘***நிர்வாகம் பண்ணுதல்’ என்ற சொல்லிற்குப் பொறுத்தல், ஆளுதல், பராமரித்தல், முடிவுசெய்தல், செயல்நடப்பித்தல், மெச்சும்படி ஒன்றைச்சாதித்தல், உறுதிப்படுத்துதல்*** (ப.729) எனப் பொருள் கொள்கின்றது. ***நிர்வாகன், நிர்வாகி என்ற சொல்லிற்கு ஆள்திறமையுடையோன், வாய்மையாளன், மேலாளர், பொறுப்பாளர்*** (ப.729) எனவும் சுட்டுகின்றது. மதுரைத் தமிழ் பேரகராதி ‘நிர்வாகி’ என்பதற்கு ***நடத்துபவன், பராமரிப்பவன்*** (ப.57) எனப் பொருள் விளக்கம் தருகின்றது. இவற்றிலிருந்து நிர்வாகம் என்ற சொல்லிற்குப் பொறுப்புடன் ஒரு செயலை முறையாக வழி நடத்துவதும், ஆள்வதும் எனப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது.

**திட்டமிடல்:**

ஒரு மனிதனுக்கு திட்டமிடல் என்பது வெற்றியைத் தேடித்தருகின்றது. வாழ்க்கையில் பின்னடைவு நோக்கிப் பயணிக்காது முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தரக்கூடியது. திட்டமிடுதல் என்பது நாம் இருக்குமிடத்திற்கும் நாம் சென்றடைய வேண்டிய இடத்திற்கும் உள்ள இடைவெளியை இணைக்கும்

பாலமாக அமைகின்றது. வெறும் திட்டம் இருந்தால் மட்டும் போதாது. திட்டமிடுதலே அவசியம் ஆகும். வெற்றியடைய நாம் எவ்வாறு உழைக்க வேண்டும் என்ற கேள்விகளை நாம் கருத்தில் கொண்டு திட்டமிட்டால் எதிலும் சுலபமாக ஜெயித்து விடலாம். **ஒரு அரசன் தமக்கு எவ்வகையில் பொருள் வரும் என்பதை முதலில் ஆராய்து செயல்பட வேண்டும். வருகின்ற அப்பொருளை உயர்த்த வேண்டும். வந்த பொருளைக் காக்க வேண்டும். காத்தவற்றை முறையாகச் செலவிட வேண்டும் என்பதை**

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்ல தரசு (குறள். 385)**

**எனக் கூறுகின்றது. அது போல** ஒரு நிறுவனம் வளர்ச்சி பெற்றது என்று நாம் சொல்ல வேண்டுமானால் அந்நிறுவனத்திற்கு அதிக வருவாய் கிடைக்க வேண்டும். ஒரு மேலாளர் தன் நிறுவனத்தைச் சிறப்பான முறையில் நடத்த வேண்டுமென்றால் வருவாயைக் கூட்டுவதற்கான புதிய வழிகளைத் தேட வேண்டும். தேடிய வழியை நிறுவனத்தின் வருவாயைக் கூட்டுவதற்காகப் பயன்படுத்த வேண்டும். வருவாயைப் பெருக்கினால் பொருளும், செல்வமும் அதிகரிக்கும்.இதனை வீணாகச் செலவு செய்யாமல் தேவையானவற்றிற்கு மட்டும் செலவுசெய்து மிதீ இருக்கின்றவற்றை பாதுகாக்க வேண்டியது ஒரு மேலாளரின் பொறுப்பு என்பதை இங்கு அறிய முடிகின்றது. **பேரிட்டோ என்ற அறிஞரின் கருத்துப்படி திட்டமிட்டு செய்யும் செயலில் 20% உழைப்பில் 80% காரியம் முடிந்துவிடும். திட்டமில்லாத செயலில் 80 %** உழைப்பில் **வெறும் 20 % கரியம் மட்டுமே முடியும்** (முனைவர் பி. கே மனோகரன், வாழ்க்கைத்திறன் மேம்பாடு ப.27) என்று குறிப்பிடுகின்றார். மேலும்,

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன் கண்விடல் (குறள்.517)**

எனப் பகருகின்றது. ஆகவே ஒரு காரியத்தை எப்படி நிறைவேற்ற வேண்டும் என ஆராய்ந்து பார்த்து அக்காரியத்தை ஒருவரிடம் ஒப்படைத்தால் வெற்றி கிடைக்கும் என்பதை இதன் கண் அறிய முடிகின்றது. ஒருவர் செல்வாக்குடன் வாழ விரும்பினால் தாம் மேற்கொண்ட செயலை ஆராய்ந்து திட்டமிட வேண்டும் என்ற கருத்தை ***வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்*** (பா.95) என முதுமொழிக்காஞ்சியடியும் எடுத்துரைக்கின்றது.

**மதிப்பிடல்**

ஒரு குறிப்பிட்ட இடத்தில் எல்லோரும் ஒரு வேலையைச் செய்கின்றனர் ஆயினும் அதில் ஒருவர் சிறப்புற அவ்வேலையைச் செய்பவராயின் அவரை மதிப்பிட்டுச் சிறப்பிக்க வேண்டும். ஒரு மேலாளர் தன் அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்களை ஒரே தரத்தில் வைத்துப் பாராமல், அவரவர் தகுதிக்கேற்ப கவனித்தால் அவருடைய அலுவலகம் மிகச் சிறப்பாகச் அமையும். மாறாக, அனைவரையும் சமமாக நடத்தினால், பணியை முழுமையாகச் செய்து உயரும் எண்ணமுடையவர் யாராயினும் அப்பணியை விட்டு விலக நினைப்பர். ஆகவே அப்பணியாளர் தன்னை விட்டு நீங்காமல் இருக்க வேண்டுமானால், மேலாளர் தகுதி பார்த்து ஒவ்வொரிடமும் பழகுதல் வேண்டும். இதனை

**பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**

**அது நோக்கி வாழ்வார் பலர் (குறள். 528)**

**என்ற அடி விளக்குகின்றது.**

**மனம் சோர்வின்றி இருத்தல்**

**மனம் அமைதியாக இருந்தால் எந்த வேலையும் விரைவாக நடக்கும். மனம் தொய்வு அடைந்தால் எந்த வேலையும் நடைபெறாது.** துன்பம் வரும்போது அதற்காக வருந்தாமல் மனம் மகிழ வேண்டும், அத்துன்பத்தை வெல்லக்கூடியது மகிழ்ச்சியே ஆகும். ஒரு மேலாளர் தன் அலுவலகத்தில் ஏதாவது துன்பமோ, நஷ்டமோ ஏற்பட்டால், அதை நினைத்து சிறிதும் வருந்தாமல் அதனை சரி செய்வதற்கு வேண்டிய வழியினைத் தேட வேண்டும். அந்த மேலாளர் தனக்கு நேரிட்ட துன்பத்தைத் தன் பணியாளர்களிடம் வெளிக்காட்டினால், அவரின் தலைமையில் பணி செய்கின்றவர்களும் துன்பத்தில் ஆழ்ந்து விடுவர். அதனால் துன்பம் நேரிடும்போது அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அதிலிருந்து விடுபடவேண்டுமென்பதை,

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**

**அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் (குறள். 621)**

**என விளக்குகின்றது.**

**முடிவெடுத்தல்**

ஒரு செயலை செய்யத் தொடங்குமுன் அதனை முடிக்கும் வழி அறிந்து தொடங்க வேண்டும். செயலைத் தொடங்கிய பின்பு பின்வாங்கக் கூடாது. ஒரு செயலைத் தொடங்கிய பின் மறுபரிசீலனை செய்தால் நமக்கு தேடித் தருகின்ற புகழைக் கெடுத்து விடும்.

**எண்ணித் துணிக் கருமம் துணிந்த பின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு (குறள். 467)**

**எனவே ஒரு செயலை ஆராய்ந்து நேர்த்தியாகச் செய்ய வேண்டும்.** *முடிவெடுத்தல் என்னும் இத்திறன் கைவரப்பெற்றவர்கள் தலைமைப்பண்பு மிக்கவராக விளங்குவர் ( கா.திருநாவுக்கரசு, திருக்குறள் நெறியில் ஆளுமைத்திறன் மேம்பாடு, ப.292)*

**காலம் தாழ்த்தாது இருத்தல்**

காலம் அல்லது நேரம் என்பது யாருக்காகவும் காத்திருக்காது. எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரமே கிடைக்கின்றது. அதனை சரியான முறையில் நிர்வகிக்கும்போது சாதனையாளர்களாக, வெற்றியாளர்களாக மாறுகின்றார்கள். நமக்கு கிடைத்த நேரத்தை வீணாகக் கழிக்காமல் பயனுள்ளதாக மாற்ற வேண்டும். ஒவ்வொரு நிமிடத்தையும் உரியவாறு பயன்படுத்த வேண்டும். ***காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது*** என்றார் பேரறிஞர் அண்ணா. காலம் அறிதல் என்ற அதிகாரத்தையே வள்ளுவர் வடைத்திருக்கின்றார். ஆகவே நம் வாழ்வில் இளமைப்பருவம், உறக்கம், ஓய்வு, முதுமை எனப் படிப்படியாக வாழ்வுக்காலம் குறைந்து விடுகிறது. அதனால் செய்ய வேண்டிய காரியத்தை உடனே செய்துவிடவேண்டும். நாளை செய்யலாம் பிறகு பார்க்கலாம் என்று இருக்கக் கூடாது.

**தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**

**தூங்காது செய்யும் வினை (குறள். 672)**

நிறுவனத்திலும் ஒரு மேலாளர் நேரத்தைச் சரியாகக் கடைபிடிக்க வேண்டும். எந்தெந்த செயல்களை எந்தெந்த நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என்பதனை மேலாளர் சரியாக அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில் நிர்வாகம் நட்டத்தை சந்திக்க நேரிடும். ***காலத்தை வீணாக்கினால் அது ஒருவரது ஆற்றலை வீணாக்குகிறது.வாழ்க்கையை வீணாக்குகிறது. (முனைவர் இரா.நந்தினி, திருக்குறள் காட்டும் காலம் ப.125)*** *என்பதை அறிந்து ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும்.*

**விடாமுயற்சி**

திருக்குறள் முயற்சியின் சிறப்பை எடுத்துரைக்க ஆள்வினை உடைமை, ஊக்கம் உடைமை என்ற அதிகாரங்களைப் படைத்திருக்கின்றது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற நம்பிக்கையை வேரோடு புறந்தள்ளி முயற்சிக்கு மகுடம் சூட்டி புதுமையை பிரகடனப் படுத்துகின்றது. ஒருவருக்கு ஊக்கம் உடைமையே சிறந்த செல்வமாகும். அதுவே நிலையானது. ஊக்கம் இருப்பவனிடம் திருமகளும், ஊக்கம் இல்லாதவனிடம் மூதேவியும் இருப்பதை திருக்குறள் உரைக்கின்றது.

**தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன்**

**மெய்வருத்தக் கூலி தரும்(குறள்,619)**

**உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார்**

**மரம் மக்கள் ஆதலே வேறு (குறள். 600)**

என ஊக்கம் இல்லாதவன் மரத்திற்கு ஒப்பாக சுட்டப்படுவதை இங்கு அறியமுடிகின்றது. ***விவேகானந்தர் முடியாது என்னால் இயலாது என்று மட்டும் சொல்லாதீர்கள். நீங்கள் எல்லையற்றவர்கள். காலமும் இடமும் கூட உங்கள் இயல்புடன் ஒப்பிடும்போது ஒன்றுமே இல்லை. நீங்கள் எதையும் செய்ய முடியும் எல்லாம் வல்லவர்கள் நீங்கள். (விவேகானந்தரின்அறிவுரைகள், ப.3)*** என்று கூறுகின்றார். இதிலிருந்து தோல்வியே வெற்றிக்கு முதல்படி என்பதை நாம் உணர வேண்டும் எனலாம்.

**பொருள்**

நமது உடம்பிற்கு உணவு இல்லையேல் உடல் சோர்ந்து விடுவதுபோல, ஊதியம் தராத எந்த வேலையும் சோர்ந்து விடும். தோல்வியைத் தழுவி விடும். 'பணம் என்றால் பிணமும் வாய் பிளக்கும்' என்பது நம் முன்னோர்களிடம் நாம் கற்றுக் கொண்ட பழமொழி. வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் பணம் முக்கியப்பங்கு வகிக்கின்றது. ஒருவனின் உயர்வும், தாழ்வும் சாதியால் மட்டும் வருவது அன்று. பணத்தாலும் விளைகின்றது. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு பணத்தால் பயணிக்கின்றது. உறவுகளில் மகிழ்ச்சியும், விரிசலும் நிலவுவதற்கு பணமே காரணம் ஆகின்றது. ஒருவன் வேலை செய்யும்பொழுது அவனை ஊக்கப்படுத்தினால் மட்டுமே அவ்வேலை வேகமாக முடியும். அதற்கு ஊதியம் அடைப்படையாகின்றது. குடும்பத்தை வழிநடத்த அனைவருக்கும் தேவையுடைய பொருளாக இன்று சிறந்து விளங்குகின்றது. ஒரு பொருட்டாக மதிக்கத்தகாத ஒருவனை மதிக்கவல்ல ஆயுதமாக மாற்றுவது இப்பணம் என்னும் பொருளே ஆகும் என்பதை பொருள் செயல்வகை என்ற அதிகாரத்தில் குறிப்பிடுகின்றார் வள்ளுவர். இதனை,

**பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்**

**பொருள் அல்லது இல்லை பொருள் (குறள். 751)**

எனச் சுட்டுகின்றது. ***பொருளுடையான் கண்ணதே போகம்*** (பா.3) எனச் சிறுபஞ்சமூலமும்

கூறுகின்றது. ***இன்றைய மனிதன் தனிமையிலும், இறுக்கத்துடனும் வாழும் சூழல் பெருகியுள்ளது. பணம் பண்புள்ளவனிடம் சேரவேண்டும். பண்பில்லாதவனிடம் சேரும்போது. அது வீணாகித்தான் போகும். கார்மேகம் மழையைச் சுமந்து வந்து, அப்படியே எடுத்துக்கொண்டுச் செல்வதினால் பயனில்லை. அது பூமியில் விழ வேண்டும். அது போலத்தான் பணம் படைத்தவர்கள் இல்லாதோர்க்கு ஈதல் நலம் பயக்கும். (கி.ச.புனிதவதி, வள்ளுவரின் குடிமையியலில் இன்றைய வாழ்வியல், ப.90)***

**குறிப்பறிதல்**

வள்ளுவர் குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தை மட்டும் அதன் முக்கியத்துவம் அறிந்து இரண்டு அதிகாரத்திற்குள் புகுத்தியிருக்கின்றார். நாம் ஒரு செயலைச் செய்து முடிக்க நினைத்தால் உடனே அச்செயலைச் செய்துவிட வேண்டும். இல்லையெனில் மனதில் சோம்பேறித்தனம் குடிகொண்டு விடும். ஒரு வேலையைப் பல நாட்களுக்கு நீடித்தோம் எனில் அவ்வேலை குறிப்பிட்ட நேரத்தில் சரியாக நடைபெறாது. ஒரு செயலை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் பொழுது அவர் அவ்வேலையைச் சரியாகச் செய்து முடிப்பாரா என்று ஆலோசித்த பின்னரே ஒரு வேலையை அவரிடம் கொடுக்க வேண்டும். தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும் இல்லாத சோம்பேறியிடம் வேலையை ஒப்படைக்கும்போது அவ்வேலை சிதைவுற்று அழியும் அதனால் குறிப்பறிந்து நடந்து கொள்ள வேண்டும் என்னும் உயரிய சிந்தனையை,

**கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**

**மாறா நீர் வையக்கு அணி (குறள் .701)**

என்று விளக்குகின்றது. குடும்ப அமைப்பிலும் ஒருவரது முகத்தைக் கண்டு குறிப்பறிந்து வேலை செய்தால் மகிழ்ச்சியே நிலவும். வீடும் அமைதி பெறும்.

**இனிமையாகப்பேசுதல்:**

வாழ்வாங்கு வாழ, ஒருவனுக்கு இனிமையான சொல்லும், தெளிந்த பேச்சும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. தனக்கு நாவில் தோன்றிய வார்த்தைகளை எல்லாம் கூறினால் மற்றவர்களிடம் தேவையற்ற மனக்கசப்பும், பகைமையும் தான் ஏற்படும். அதனால், எந்த ஒரு வேலையும் சரியாக நடைபெறாது. பேசும்போது நல்ல சொற்களைப் பேச வேண்டும். பயனில்லாத சொற்களைப் பேசக்கூடாது. மற்றவர்களின் மனம் அறிந்து பேச வேண்டும்.

**முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்ததான்**

**இன்சொலினதே அறம் (குறள் .93)**

வாழ்க்கையில் அறம் என்பது இன்சொல்லில்தான் அமைகின்றது *கொடுத்தால் வளருமே அன்றி குறையாத ஒன்று அன்பு. உள்ளங்களை இணைக்கும் ஆற்றலையுடையது. அன்புடையவர்களாக விளங்க காண்பவர்கள் அனைவரையும் நேசித்த பிறகு கடைசியாக நம்மை நேசித்துக்கொள்ள வேண்டும். அன்ப இல்லை என்றால் நம் அறிவு பயனற்றுப்போகும். (***பொ.ராணி**, வள்ளுவத்தில் மனிதநேயம், ப.111) இதே

போன்று

**தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே**

**நாவினால் சுட்ட வடு (குறள். 129)**

என்றும் சொல்லின் சிறப்பை எடுத்துரைக்கின்றது. ***ஈடுபாட்டுடன் எல்லோரும் பணி செய்ய வேண்டும் அப்படிப்பட்ட ஒரு சூழலை உருவாக்குபவர்களே சிறந்த நிர்வாகத்தைத் தர முடியும்*** (வெ. இறையன்பு, இலக்கியத்தில் மேலாண்மை, ப.93) எனலாம்.

**அறிவுடைமை**

ஒருவனுடைய அறிவு அவனுக்கு அழிவு வராமல் காக்கும் தன்மை உடையது. அறிவு உடையவர்கள் இயற்கைச் செல்வம் இல்லாத காலத்திலும் கல்வியறிவின் துணைகொண்டு வேண்டிய செல்வங்களைப் படைக்கும் திறன் பெற்றவர்கள்.நிர்வாகத்திலும் அறிவுத்திறனே முதன்மை பெறுகின்றது. வெற்றியைப் பெற்றுத் தருகின்றது. அறிவுடையவர் எல்லாப் பண்பு நலன்களையும் பெற்றவராக மதிக்கப் பெறுகின்றார். ஒருவன் ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கு இவன் சரியானவனா என்பதை ஆராய்ந்து பார்த்த பின்னரே அவ்வேலையை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் இல்லையெனில் அவ்வேலை பல வருடங்கள் கடந்தாலும் நடக்காது என்பதை,

**வினைக்கு உரிமை நாடிய பின்றை**

**அவனை அதற்கு உரியனாகச் செயல் (குறள், ப. 518)**

எனக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர். ‘தெரிந்து வினையாடல்’ என்ற ஒரு அதிகாரத்தையே இதற்கு இலக்கணமாகப் படைத்திருக்கின்றார். கல்வியைத் தவிர மற்ற செல்வங்கள் இவ்வுலகில் புகழைத் தராது என வள்ளுவர் கூறுகின்றார்.

**ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் மன் மகனைச்**

**சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள்.69)**

என்றெல்லாம் அறிவின் மேன்மையை வள்ளுவர் உரைக்கின்றார்.

*……………………………………*

*தலைமை கருதுவோரை ஒதுக்குதல்*

*ஒரு குடிப் பிறந்த பல்லோருள்ளும்*

*மூத்தோன் வருக என்னாது அவருள்*

*அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்*

*வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்*

*கீழ்ப்பால் ஒருவன் கற்பின்*

*மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே (புறம். பா.183.5-10)*

பெற்றெடுத்த தாய்க்கு எல்லாக் குழந்தைகளும் ஒன்றுதான். ஆனாலும் கற்ற கல்வியால் சிறந்த மகனையே பெற்ற தாயும் விரும்புகிள்றாள் என்று புறநானூறு பதிவிடுகின்றது. இதனை நோக்கும் போது கல்வியின் அறிவின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது.

ஒருவர் தமக்கு வேலை செய்யும் இடத்தில் தலைமையான ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இருப்பது பேராசைக்கு வித்திடுவதாகும். இப்பேராசை ஒன்றே அவனுக்கு எமனாக அமைந்துவிடும். அழிவை உண்டு பண்ணும்.

**பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**

**அணியுமாம் தன்னை வியந்து (குறள். 978)**

என்று திருவள்ளுவர் பணிவின் பெருமையை எடுத்துரைக்கின்றார். ஒரு செயலைச் செய்யும் போது அச்செயலில் தானே முதன்மை பெறவேண்டும் என்ற எண்ணம் உடையவர்களை ஒரு அரசன் தன்னுடன் எப்பொழுதுமே வைத்திருக்கக் கூடாது அது ஓர் அறையில் பாம்புடன் ஒன்றாக இருப்பதற்குச் சமம் என்பதை,

**தலைமை கருதும் தகையாரை வேந்தன்**

**பாம்போடு உடனுறையும் ஆறு (பழமொழி நானூறு, பா.254)**

என்ற அடி விளக்குகின்றது. ***எண்ணங்களினாலும், செயல்களினாலும் மனிதன் தனித்தன்மை பெற்று இயங்குகிறான். இதற்கு அடிப்படையாக அமைவது அவனுடைய ஆளுமைப் பண்புகள் ஆகும். இது எல்லையில்லாத அறிவையும், ஆய்வுத்தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது.இவ்வாளுமை முழுமையாக வளர வகை செய்வதே கல்வி. கல்வியானது கற்போருக்கு முதலாவதாக தம்மைத் தாமே அறிய உதவுகிறது. மனிதனுக்குள் இருக்கும் முழுமைத் தன்னையை***

*வெளிக்கொணரும் மற்றும் மலர வைக்கும் செயல்பாடே கல்வியாகும். (பி. செல்வமேரி விவேகானந்தர் ரூசோ கல்வித்தத்துவம் ஓர் ஒப்பீடு, ப. 60)*

**நடுவுநிலைமை**

நிர்வாகத்தில் நடுவுநிலைமை என்பது ஓர் உயர்ந்த பண்பாகும். எந்த ஒரு செயல்பாடானாலும் விருப்பு, வெறுப்பு இன்றி ஆராய்ந்து பார்த்து விவாதித்து முடிவு செய்ய வேண்டும். ஒரு தலைப்பட்சமாக ஒரு செயலில் ஈடுபடக்கூடாது. ஒன்றைச் சீர்தூக்கிப் பார்க்கின்ற குணமும், பண்பும் உடையவராக ஒருவர் இருக்க வேண்டும். நீதியை நிலை நாட்டுபவராகவும், மன நிறைவுடன் ஒரு வேலையை செய்பவராகவும் பணியாற்ற வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால் மட்டுமே நாட்டில் நிர்வாகம் செழிக்கும். இல்லையெனில் அச்சமுதாயம் பின் தங்கி விடும். ஓர் இடத்தில் ஒருவர் சொல்வதை மட்டுமே உண்மை என்று நம்பி குற்றத்தை ஆராயாது தண்டிக்கக்கூடாது. பலருடைய கருத்துக்களையும் கேட்ட பின்னரே கலந்து ஆலோசித்து இறுதியான முடிவை ஒருவர் எடுக்க வேண்டும். அப்போதுதான் நிர்வாகத்தில் வெற்றியை பெற முடியும். இல்லையெனில் நல்ல பணியாட்களை இழக்க நேரிடும். வேலையிலும் தொய்வைச் சந்திக்க நேரிடும்.

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**

**பிறவும் தமபோல் செயின் (குறள். 120)**

பிறருடைய பொருளையும், தம்பொருள்போல் போற்றி வாணிகம் செய்வதே சிறந்த முறையாகும். நடுவுநிலைமை உடையவனின் செல்வம் உயரும் என வள்ளுவர் கூறுகின்றார். இத்தகைய பண்பு அனைவரிடமும் இருக்க வேண்டும். தன்னுடைய பொருளை மட்டும் நினைத்து சிந்திக்கக்கூடாது. சுயநலமாக சிந்தித்தால் உயர்வைப் பெற முடியாது. வெற்றி பெற்றாலும் நிலைக்காது என்பதை,

**அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி**

**செற்றமும் உவகையும் செய்யாது காத்து**

**ஞெமன் கோல் அன்ன**

**செம்மைத்து ஆகி (மதுரைக்காஞ்சி, பா.வரி.489 - 490)**

எனச் சங்க இலக்கியப் புலவரான மாங்குடி மருதனார் நடுவுநிலைமைப் பண்பிற்கான செயல்பாடு எவ்வாறு இருக்க வேண்டுமெனத் தமது பாடலில் பதிவு செய்கின்றார்.

**முடிவுரை**

நிர்வாகம் என்பது வெற்றியை அளிப்பது, பொறுப்பை ஏற்படுத்துவது, தன்னம்பிக்கையை வளர்ப்பது, சுயமுன்னேற்றத்தையும், விடாமுயற்சியையும் நல்குவது. நாளை வாழ்க்கையில் என்ன நடக்குமோ என்று கவலைப்பட்டு வாழ்வதை விட இன்று நாம் திட்டம் தீட்டி நிர்வாகத்தை வாழ்க்கையில் கடைபிடித்தால் உயர்வு என்னும் சாதனைக் கனியைப் பெற்று விடலாம் என்பதை உணர்த்தி நிற்பதாய் இக்கட்டுரை விளங்குகின்றது.

**துணைநின்ற நூல்கள்:**


[1] இராசமாணிக்கம்பிள்ளை.ம. (உ.ஆ). *பழமொழிநானூறு*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை -1 முதற்பதிப்பு, நவம்பர் -1948.

[2] இராசாராம், துரை. (உ.ஆ*) .சிறுபஞ்சமூலம்*. முல்லை நிலையம், சென்னை -17. முதற்பதிப்பு - 1995.

[3] இராசாராம். துரை. (உ.ஆ). *முதுமொழிக்காஞ்சி.* முல்லை நிலையம், சென்னை – 17, முதற்பதிப்பு - 1995.

[4]இறையன்பு,வெ. *இலக்கியத்தில் மேலாண்மை.* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்(பி)லிட்.சென்னை-600 098, முதல்பதிப்பு, ஜனவரி - 2016.

[5] சுப்பிரமணியன், பா.ரா. (ப.ஆ). *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி*. (தமிழ்,தமிழ்- ஆங்கிலம்) திருவான்மியூர், சென்னை-108. முதல்பதிப்பு – 1992.

[6]சுப்பிரமணியன், ச.வே. (ப.ஆ). *மெய்யப்பன் தமிழ் அகராதி*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108 முதல்பதிப்பு - 2006.

[7] செல்வமேரி பி. *விவேகானந்தர் ரூசோ கல்வித்தத்துவம் ஓர் ஒப்பீடு*. சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், ஆகஸ்ட் – 2022, DOI: 10.4256/irjt224.s248.

[8] திருநாவுக்கரசு. கா. *திருக்குறள் நெறியில் ஆளுமைத்திறன் மேம்பாடு.* நவீனத் தமிழாய்வு, ராஜா பதிப்பகம், திருச்சி. மார்ச் - 2021, ISSN – 2321-984X.

[9] பாலசுப்பிரமணியன்,கு.வெ. (உ.ஆ). *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.சென்னை-98. முதல்பதிப்பு ஏப்ரல் - 2004.

[10] *மதுரைத் தமிழ்ப் பேரகராதி*. சந்தியா பதிப்பகம், ஃப்ளாட் ஏ.நியூடெக் வைபவ், அசோக்நகர், சென்னை- 83. முதல்பதிப்பு – 2004.

[11] புனிதவதி*.* கி.ச.*வள்ளுவரின் குடிமையியலில் இன்றைய வாழ்வியல்*, தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி I, II. ஜனவரி – 2019, E- ISSN - 2581 – 7140.

[12] மனோகரன். பி.கே. *வாழ்க்கைத்திறன் மேம்பாடு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை-600 098, முதல்பதிப்பு, அக்டோபர் -1992.

[13]நந்தினி. இரா. *முனைவர். திருக்குறள் காட்டும் காலம்.* சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ், தொகுதி IV, ஜனவரி – 2020, E- ISSN - 2582-2810.

[14]நாகராசன்,வி.(உ.ஆ). *மதுரைக்காஞ்சி*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட். சென்னை- 600 098, முதல்பதிப்பு, ஏப்ரல் - 2004.

[15]ராணி .பொ.*வள்ளுவத்தில் மனிதநேயம்.* செம்மொழித்தமிழ், ராஜா பதிப்பகம், திருச்சி. ஜீலை- 2019, ISSN – 2321-0737.

[16]வரதராசனார், மு. (உ.ஆ). *திருக்குறள்*. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-18, முதற்பதிப்பு, மே – 1959.

**References**

[1] Rajamanikammallai.M. (U.A.). *Proverbs four hundred*. South Indian Saiva Siddhanta Publishing House, Chennai -1st edition, November -1948.

[2] Razaram, Durai. (U.A). *cirupancamulam* .Mullai Station, Chennai -17. First edition - 1995.

[3] Rajaram. Durai. (U.A.). *Muthumozhikkanchi.* Mullai Station, Chennai - 17, First Edition - 1995.

[4] Iraiyanpu.V. *Management in Literature*. New Century Book House (P) Ltd. Chennai-600098, First Edition, January - 2016.

[5] Subramanian, B.Ra. (P.A.). *A Modern Tamil Dictionary* of Kriya. (Tamil, Tamil- English) Thiruvanmyur, Chennai-108. First edition – 1992.

[6] Subramanian, S.V. (P.A.). *Meiyappan Tamil Dictionary*. Manivaskar Publishing House, Chennai-108 First Edition - 2006.

[7]Selvameri, B. *Vivekananda Rousseau Philosophy of Education A Comparison*. International Tamil Journal, August – 2022, DOI: 10.4256/irjt224.s248.

[8] Thirunavukarasu, Ga. *Personality Development in Thirukkural*. Modern Tamil Studies, Raja Publishing House, Trichy. March - 2021, ISSN – 2321-984X.

[9] Balasubramanian, G.V. (U.A.).*Purananuru.* New Century Bookhouse (P) Litd.Chennai-98. First Edition April - 2004.

[10]*Madurai Tamil Dictionary*. Sandhya Publishing House, Flat A. Newtech Vipav, Ashoknagar, Chennai- 83. First Edition – 2004.

[11]Punitavati. K.S. *Valluvar's Civics in Contemporary Life*. International Journal of Tamil Language and Literature, Volume I, II. January – 2019, E- ISSN - 2581 – 7140.

[12]Manokaran. B.K. *Improvement of quality of life*. New Century Book House (B) Litt.Chennai-600 098, First Edition, October -1992.

[13]Nandini. Ira Dr. *Thirukkural kattum Kallam.* Sanlax International Journal of Tamil Studies, Volume IV, January – 2020, E- ISSN - 2582-2810.

[14]Nagarasan, V. (Ua*). Maduraikanchi*. New Century Book House (P) LTD.Chennai-600 098, First Edition, April - 2004.

[15] Rani .B. V. *Humanity in Valluvam. Semmozhithamil,* Raja Publishing House, Trichy. July- 2019, ISSN – 2321-0737.

[16] Varadarasanar, M. (U.A.*). Thirukkural*. South Indian Saiva Siddhanta Publishing House, Chennai-18, First Edition, May – 1959.